**நினைவில் நெகிழ்ந்து,**

# பணி நிறைவு வாழ்த்து!

**திருமிகு வீ.கோவிந்தன்,**

**நாள்: 29-02-2024**



வங்கக் கடலருகில் வாய்த்த பொன்மகுடம்,
சுங்கத்துறை யென்னும் தீர்வைச் செயலகமாம்!
அங்கம் இதுவென்று ஆன்ற பணி தொடங்கி,
தங்கமாய்ச்சில ஆண்டு தவழ்ந்து நடக்கையிலே,

சிங்கமாய் ஒருநூறுபேர் சேர்ந்து பணியமர்ந்தார்!
அங்கரவரின் பணியதுவோ கணினியில் என்றாக,
சிங்கமாய் பணி தொடர்ந்தார் சீரிட்ட கலன்களோடு!
எங்களின் இணையாக இருந்து பயணித்தோம்!



தங்கமாய்ச் சிலரிடத்து தகைந்தது நட்பதுவாம்!
அங்கவரில் சிலரிடமும் ஆழ்ந்த நட்புண்டு!
அங்கொருவராய் அமைந்த நண்பர் **கோவிந்தன்!**
எங்களின் நட்பை இன்னொரு கரமாய்,





இயக்கி வைத்தவர் **பார்த்த சாரதி** பெருமாள்!
எங்களின் பணியினூடே எழுந்தது தமிழ் முழக்கம்!
முயங்கிய சீர்பணியகத்தில் முகிழ்ந்த போராட்டம்,
தயக்கமின்றிச் சிலரது தடங்களை முடக்கிப் போட,

மயக்கத்தில் ஆழ்ந்ததாய் காலம் செல்ல,
இயன்நிலை காணாது நிறைவரோ மூவராக,
இயம்பிடத்தான் எதுவுண்டு? மனக்குமுறல்தானே!
இன்றவரின் பணிநிறைவு எதனைச் சொல்லும்?



நின்றதாம் பணியகத்து நிலைதான் என்ன?
கொன்றை மாலைசூடி வாழ்த்திட நிறைந்தாலும்,
நின்ற நிலையிலேயே நடந்து செல்கின்றார்!
இன்றவரின் பணிநிறைவால் எழுதிடுவார் புதுக்கணக்கு!



மன்றிலில் நின்றோதும் மலரவனின் அன்பும்சூழ,
கன்னலின் சாறூட்டும் கனிந்த பெயரரோடும்,
கொண்டதாம் வாழ்வின் மூன்றாம் நிலையிதனில்,
கண்ணனெனும் **பார்த்தசாரதி** காப்பான் நாளுமே!
அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
29-02-2024(காலை 8 மணி)